**04.03.2025**

**அ.வ.எண். 75/2022**

**வா.சா.2 கோமளா அவர்களின் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனது கணவர் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துகளின் வகைபாடு, விஸ்தீரணம், அளவுகள் எனக்கு தெரியாது என்றால் விஸ்தீரணம் மட்டும் தெரியும். எத்தனை இனச் சொத்துகளுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் 4 இனச் சொத்துகள். எனது கணவர் இன்று நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். தாவா சொத்தை 2009ம் வருடம் நாங்கள் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்துகள் குறித்து என்ன என்ன வழக்குகள் நடந்தது என்ற விவரமும் அதில் என்ன தீர்ப்பானது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**2.** தாவா சொத்துகள் சம்பந்தமாக இன்றைய தேதி வரை 1ம் பிரதிவாதி பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2008ம் வருடம் 1ம் பிரதிவாதி அவரது பெயரில் வருவாய் ஆவணத்தை மாற்றிவிட்டார். நீதிமன்றம் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததன் அடிப்படையில் அவர் வருவாய் ஆவணங்களை

மாற்றியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனது கணவரை கேட்டால்தான் தெரியும் என்றாலும் எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் சரியல்ல. எனக்கும் ஓரளவுக்கு தெரியும்.

3. இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞரை சந்தித்தது, வழக்கின் ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்தது, வழக்காடு ஆவணங்களை தயார் செய்தததது அனைத்தும் எனது கணவர்தான் என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்துதான் செய்தோம். 2010ம் வருடம் நீதிமன்றத்தில் தீர்ப்பாணை அடிப்படையில்தான் 1ம் பிரதிவாதி தாவா சொத்துகளை பெற்று வருவாய் ஆவணங்களை மாற்றி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.